ஸத்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளது
பிரதம சிஷ்யர்

# ஸ்ரீ வேங்கடரமண பாகவத ஸ்வாமிகள் சரித்திரச் சுருக்கம்

## நாட்டுச் சிறப்பு

தமிழ்நாடு பண்டுதொட்டு தெய்வமணங் கமழும் சிறப்பினையுடையது. காவிரி நதி பாய்ந்து, கவின் நிறைந்த வளப்பங்களையுடையது. காவிரியின் இரு மருங்கிலும் தெய்வமணங் கமழும் வைணவ, சைவ சமயங்கட்குரிய வானளாவிய கோபுரங்கள், ஆலயங்கள் நிறைந்தது. அவ்வாலயங்கள் அனைத்தும், பல வகை வண்ணங்கள் நிறைந்த சிற்ப, ஓவியங்களால் அணி செய்யப்பட்டவைகளாகும். அவைகள் கண்டவர் மனத்தைக் கவருந் தன்மையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதனால் மக்கள் யாவரும் தங்களை அறியாமலே ஆண்டவனை நினைந்து எப்போதும் வழிபாடு செய்து வருகிறார்கள்.

## தஞ்சை மாவட்டம்

இத்தகைய சீரும் சிறப்பும் பெற்ற தமிழ் நாட்டிற்குப் பெரும் சிறப்பினைத் தருவதாகத் தஞ்சை மாவட்டம் அமைந்துள்ளது. இம்மாவட்டத்தினை உலகினுக்கே உணவளிக்கவல்ல நெற்களஞ்சியம் என யாவரும் கூறுவார்கள். அன்றியும் இறைவனைப் பாமாலை பாடி வழிப்பட்டு வந்த பல அன்பர்கள் திருஅவதாரம் செய்த இடமும் இம்மாவட்டம் ஆகும். ஆகவே, இந்த மாவட்டத்தை சங்கீதக் களஞ்சியம் என்பதும் பொருந்தும். இம்மாவட்டத்தின் தலைநகர் தஞ்சை. இங்குள்ள ஸ்ரீ ப்ரகதீஸ்வரர் கோவிலும், சரஸ்வதி மஹாலும் உலக அதிசயங்களில் சிறந்த (கவின் - அழகு) ஒன்று.

தொண்டரடிப்பொடியாழ்வார், திருமங்கை ஆழ்வார், திருஞான சம்பந்தர், சுந்தரமூர்த்தி அடிகள் சுரூரார் இன்னிசையால் தமிழ்ப்பாடி இறைவனைத் தொழுதார்கள். இனிய இசை பாடுவதில் இணையற்ற ஸ்ரீ தியாகய்யர், ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள், ஸ்ரீ முத்துசாமி தீட்சிதர் ஆகிய மும்மூர்த்திகளும் இசை உலகிற்கு இணையற்ற பெருமையினைத் தந்துள்ளார்கள்.

## (இராமச்சந்திரபுரம்) அய்யம்பேட்டை

இம் மாவட்டத்தில் சிறப்புடன் விளங்குவது இராமச்சந்திரபுரம் என்று வழங்கப்பெறும் அய்யம்பேட்டையாகும். நித்தியசூரி ஸ்ரீ தூபதீர்த்தார்ய சுவாமிகள், மன்னுரார்யர், வீரபத்ரார்யர், கர்நாடக சங்கீத மேதை ஸ்ரீ தியாகய்யர் அவர்களின் முதன்மையான மாணவர் ஸ்ரீ வேங்கடரமண பாகவதரவர்களும், மகாகவி ஸ்ரீ வேங்கடஸூரி சுவாமிகள் அவதாரஞ் செய்து இந்நகரைத் தெய்வமணங் கமழும் சிறப்பினையுடையதாகவும் இசை மணங்கமழும் ஏற்றமுடையதாகவும் ஆக்கியுள்ளார்கள். இதனால் இது ஓர் புண்ணிய பூமியே ஆகும்.

## கடவுள்

ஆண்டவன் அருவாகியும், உருவாகியும், அன்பர்கட்கு அணியனாகியும், அல்லாதவர்கட்கு எட்டாதவனாகவும் ஆதியும் அந்தமும் இல்லாதவனாகவும், உலகம் யாவையும் படைத்து அளித்து அழிக்கும் தன்மையை விளையாட்டாக உடையவனாகவும், எப்பொருளும் ஆனவனாகவும் உடையவனென்று சௌராஷ்டிர கவிச் சக்கரவர்த்தி ஸ்ரீ வேங்கடசூரி சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார்.

## கடவுள் பக்தி

இம்மண்ணுலகில் மக்களாகப் பிறந்தவர்கள் அனைவரும் ஆண்டவனை அடையவும் அவன் அருளைப்

பெறவும் பல்வேறு வழிகள் உள்ளன. அவற்றுள் நாத ரூபமாய் உள்ள கடவுளை நாதோபாசனையின் மூலம் வணங்கி வழிபட்டு, அக்கடவுளது அழியாத அன்புக்கு உரியவராகி மோட்ச வீட்டினை அடைய எண்ணுவது தலைசிறந்த வழியாகும்.

அருமையான இவ்வழியினைப் பின்பற்றி இறைவன் மீது ஏராளமான கீர்த்தனங்கள் பாடி அவனை வழிபட்டு வந்தவர் ஸ்ரீ வேங்கடரமண பாகவத சுவாமிகள் ஆவார். இப்பாகவத சுவாமிகளின் அருமை பாட்டனார் ஸ்ரீ குப்பைய பாகவதர் என்பவராவார். இவர் திருச்சி மாவட்டத்தில் உள்ள அரியலூரில் சௌராஷ்டிர பிராமண வகுப்பில் தோன்றியவர். இவர் நல்லொழுக்கமும் நற்செய்கையும் உடையவர். சிறந்த வைதிக நெறியினைக் கடைப்பிடித்து ஒழுகி வந்தார். தெலுங்கிலும், வடமொழியிலும், சௌராஷ்டிரத்திலும் நல்ல புலமை பெற்றிருந்தார். கணிதம், ஜோதிடம், வானநூல் முதலியவற்றில் வல்லவர். இவருக்கு நன்னுசாமி பாகவதர் என்னும் பெயரினையுடைய புதல்வர் ஒருவர் இருந்தார். தன் மகனுக்கு வைதிக நெறியினைப் பின்பற்றி ஒழுகும் சௌராஷ்டிர விப்ர குடும்பத்தில் பிறந்த பெண்ணை மணஞ் செய்விக்க வேண்டுமென்று எண்ணினார். அதன் பொருட்டு சௌராஷ்டிர வைதீகர்கள் மிகுதியாக வாழும் அய்யம்பேட்டைக்கு வந்தார்.

வந்த சில நாளில் நல்லதொரு குடும்பத்தில் தன் மகனுக்கு மணஞ் செய்து வைத்தார். அப்போது அய்யம்பேட்டையிலும், தஞ்சை மாவட்டத்திலும் தலைசிறந்த சங்கீதப் பேறறிஞர்கள் தோன்றியிருப்பதனை நினைத்தார். தனக்கும் இசையில் வல்ல மகன் ஒருவன் பிறக்க வேண்டுமென்று ஆண்டவனை நாள்தோறும் வழிபட்டு வந்தார். பல திவ்ய தலங்கட்கும் சென்றார். திருவேங்கட மலைக்குச் சென்று அங்கு கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவேங்கடமுடையானை வணங்கி வழிபாடு செய்தார். திருவேங்கட மலைமீது அமர்ந்தருளிய பெருமானே ! அடியேனுக்குச் சங்கீதக் கலையில் மிகவும் வல்ல ஒரு புதல்வனைத் தந்தருளவேண்டும்; அவனுக்கு வேங்கடரமணன் என்ற உனது திருப்பெயரினையே சூட்டுவேன் என்று நெஞ்சம் நெக்குருக வேண்டிக்கொண்டார்.

பின்னர் திருவேங்கட மலையினின்றும் புறப்பட்டு காசி சென்று விசுவநாதப் பெருமானையும், வியாச முனிவரையும் பேரன்போடு வழிபாடு செய்தார். அப்போது அருகில் உள்ள விநாயகப் பெருமானை வணங்கி அருள்பெறுமாறு ஆணை பிறந்தது. உடனே அங்கு சென்று விநாயகப் பெருமானை வணங்கியவாறே நிலத்தில் கிடந்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் உறக்கம் கொண்டார். அப்போது விநாயகப் பெருமான் கனவில் தோன்றி, வியாச முனிவன் அம்சமாக உலகம் போற்றும் சங்கீத மேதை ஒருவன் உன் மகன் வயிற்றில் பிறப்பான் என்று அருளி மறைந்தார்.

| | | |
|---|---|---|
| 1. குப்பையர் | — | பிதாமகர் |
| 2. நன்னுஸ்வாமி | — | பிதா |
| 3. வேங்கடரமண பாகவதர் | — | புத்திரன் |

## ஜனனம்

குப்பைய பாகவதர் விழித்தெழுந்தார். யானை முகக் கடவுள் தனக்கு அளித்த அருள் வாக்கினை நினைந்து வியப்படைந்தார். தான் செய்த தவப் பேற்றினை எண்ணி எண்ணி மகிழ்ச்சியடைந்தார். பின்னர் சில நாட் கழித்து அய்யம்பேட்டைக்குத் திரும்பினார். தன் மகன் நன்னுசாமியின் மனைவி கருவுற்றிருக்கும் செய்தி கேட்டு மகிழ்ந்தார்.

பாகவதரும் நன்னுசாமி பாகவதரும் அவர் மனைவியும் செய்த நற்றவப் பயனால் சௌராஷ்டிர விஜயாப்தம் 469 சார்வரி ஆண்டு, மாசித் திங்கள் 10-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மகா பகுள தசமி திதி மூலா நட்சத்திரம்கூடிய நன்னாளில் (18-2-1781) மகன் ஒருவன் பிறந்தான். பிறந்த மகனுக்கு வேங்கடரமணன் என்றும் பெயரிட்டனர்.

## பயிற்சி

தெய்வத்தின் திருவருளால் பிறந்த வேங்கடரமணன் இளம் பருவத்திலே தெய்வப்பற்று மிக்கவராயிருந்தார். கல்வி பயிலும் பொழுதே உடற்பயிற்சியும் ஒழுங்காகச் செய்து வந்தார். வேங்கடரமணர் நாளடைவில் சிறந்த ஹடயோகியானார். அதனால் வேங்கடரமணர் உறுதியான உடற்கட்டும் கம்பீரமான தோற்றமும் உடையவராக விளங்கினார்.

ஸ்ரீ வேங்கடரமணர் இளம் பருவத்திலேயே தாய் மொழி சௌராஷ்டிரமும், தெலுங்கு, வடமொழி, தமிழ் முதலிய மொழிகளைக் கற்று, அவைகளில் நல்ல தேர்ச்சியும் பெற்றிருந்தார். பின்னர் ஸ்ரீ வேங்கடரமணர், தன் தந்தையாரிடம் சங்கீதம் பயின்று வரலாயினர். அய்யம்பேட்டையிலுள்ள சௌராஷ்டிரர் தனிப்பெருங் கோயிலின்கண் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேதரான ஸ்ரீ பிரசன்ன இராஜகோபால சுவாமியிடம் அளவற்ற பக்தி கொண்டு நாள்தோறும் சென்று வணங்கி வழிபட்டு வந்தார்.

## ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளை அடைதல்

நாளடைவில் ஸ்ரீ வேங்கடரமணர் இசையில் சிறந்த புலமை பெற்றார். வயது முதிர முதிர அவருக்கு இசையிலும் ஆர்வம் முதிர்ந்துகொண்டே வந்தது. அப்போது திருவையாற்றில் வாழ்ந்த ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் கர்நாடக சங்கீதத்தினைப் பரப்பி வருவதனை அறிந்தார். இராமபிரானிடத்துப் பேரன்புடையவரும் இணையற்ற நாதப்பிரம்ம உபாசியுமான ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் மாணவராக வேண்டுமென்று நினைத்தார். ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் நாள்தோறும் பஜனை செய்து வருவது பழக்கம். பஜனையில் துவக்கத்திலும் மங்களம் பாடும்போதும் முறையே சௌராஷ்டிர ராகத்திலும் கன்னடசௌராஷ்டிர ராகத்திலும் பாடுவது வழக்கம். அக்காலத்தில் சௌராஷ்டிர சமூகம் சங்கீதத்தினை உலக முழுவதும் பரப்புவதற்குப் பெரிய

தொரு தொண்டினைச் செய்து வந்தது. இதனை அறிந்த சுவாமிகளும் சௌராஷ்டிர சமூகத்தில் தோன்றிய ஒருவன் தனக்கு மாணவனாகக் கிடைத்தால் நலமென பன்முறை ஆவலுற்றார்.

ஓர் சுபதினத்தில் வேங்கடரமணர் சுவாமிகளின் சன்னிதானம் சென்று ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து அகமும் முகமும் மலர இனிமையாக உரையாடினார். தனது எண்ணம் நிறைவேறியமை குறித்து சுவாமிகள் பெரிதும் மகிழ்ந்து சிஷ்யராக ஏற்றுக்கொண்டார். வேங்கடரமணர் நாள்தோறும் அதிகாலையில் எழுந்து நீராடி, சுவாமிகளின் பூசனைக்கு வேண்டிய துளசி, மற்றும் நறுமணமுள்ள மலர்களை அய்யம்பேட்டையிலிருந்து கொண்டுவந்து மாலையில் திருவையாற்றிலுள்ள ஸத்குருவிடம் கொடுப்பது வழக்கம்.

சுவாமிகள் பூசனைபுரியும்போது ஏதேனும் நைவேத்தியம் செய்து ஆண்டவனுக்கு அமுதுசெய்வித்த பின்னர் அதனை அங்கு வந்திருந்த எல்லோருக்கும் வழங்குவது வழக்கம். ஆண்டவனுக்கு அமுது செய்விக்காமல் தாம் எதனையும் உண்ணும் வழக்கம் சுவாமிகளிடம் இல்லை.

## துளசி தள மகிமை

ஸ்ரீ ஸ்வாமிகள் ஸ்ரீராமநவமி உத்ஸவம் நடத்திய போது பாகவதர் பூஜைக்குரிய துளசிதளம் - துளசிதள மாலை (புஷ்பங்கள் இன்றி) கற்கண்டு, தேங்காய், பழம் கொண்டு போய் சமர்ப்பித்தார். ஸ்வாமிகள் ஏற்று இராமபிரான் முன் வைத்து,

''துளசி தளமு லசே ஸந்தோஸ முகா பூஜிந்து'' என்னும் கீர்த்தனத்தைப் பாடிக்கொண்டே பூசையை ஆரம்பித்தார்.

''ஸரஸீருக புன்னக, சம்பக, பாடல, குருகவ
கரவீர, மல்லிகா, சுகந்த ராஜ சுமமுல்
தானி வியொக பரியாய முத்ர மாத் முனி
ஸ்ரீ ராமுனிவரத் தியாகராஜ நுதனி''.

அக்கீர்த்தனையிலுள்ள சரணத்தைப் பாடிக் கொண்டே அர்ச்சனை செய்யும்போது வாக்கில் எந்தப் பூக்களின் பெயர்கள் வந்தனவோ, அந்தப் பூக்கள் தன் கரத்திலும் தானே வந்து இராமபிரானின் திருவடிகளில் வீழ்வதனைக் கண்டார். காணவே வியப்படைந்த சுவாமிகள் அங்கிருந்த மாணவர்களிடம் சொல்லி மீண்டும் அதே போலக் கூறி அர்ச்சனை செய்தார். அந்த வியக்கத்தக்க நிகழ்ச்சி மீண்டும் உண்டாகியது. உண்டாகவே சுவாமிகள் வேங்கடரமணரிடம் ஏதோ சிறப்பு இருப்பதாக அறிந்து பெரிதும் பாராட்டி வேங்கடரமணருக்கு பூரண ஞானம் உண்டாக ஸ்ரீ ராம பிரானைப் பிரார்த்தித்து ஷட்வித மார்க்கிணி ராகத்தில் ''ஞான மொஸக ராதா'' என்னும் கீர்த்தனையைப் பாடி ஞானம் லபிக்கச் செய்தார்.

அன்று முதல் வேங்கடரமண சுவாமிகள் கற்பித்த படியே இன்னிசை பாடலாயினர். சற்றேறக்குறைய 30 ஆண்டுகள் குருகுல வாசமாக சுவாமிகட்குத் தொண்டாற்றி அவர்களது பேரன்பினைப் பெரிதும் பெற்றார். அவர்களது மாணவர்களில் முதன்மையாகக் கூறுவதற்குரிய பெருமையினையும் பெற்றார்.

வேங்கடரமணர் தெலுங்கு, வடமொழி, சௌராஷ்ட்ரம் முதலிய மொழிகளில் சிறந்த புலமை பெற்றது போலவே இசைக் கலையிலும் சிறந்த புலமை பெற்றார். சுவாமிகள் இராமபிரான் மீது அன்பின் பெருக்கால் தன்னையும் மறந்து இசை பாடும்போது அங்கு அருகில் இருந்து அந்த சாகித்தியங்கள் அத்தனையும் மனப்பாடம் செய்துவிடுவார். இராகத்திற்கும் தாளத்திற்கும் ஏற்றவாறு பாட்டுக்களைச் ஸ்வரப்படுத்தி வைப்பார். அடுத்த நாள் அவைகளைச் சுவாமிகளிடம் காட்டுவார். கிருதிகளை நாள்தோறும் சாதகம் செய்யும் பொருட்டுத் திருவையாறு தெற்கு வீதியில் உள்ள தனது இல்லத்தில் இரவில் தங்கியிருந்து காலையில் அய்யம்பேட்டைக்கு வருவது வழக்கம். இவ்வாறு சங்கீத உலகிற்கு அருமையான தொண்டு செய்து அழியாத புகழை நம் வேங்கடரமணர் பெற்று வந்தார்.

## திருமணப் பரிசு

குரு சுவாமிகள் அருந்தவ செல்வியான சீதா லெட்சுமியைக் குப்புசாமி ஐயருக்குச் சிறப்பாகத் திருமணஞ் செய்து கொடுத்தார்கள். அதுபோது அன்பர்கள் பலர் மணமக்கட்கு பல அன்பளிப்புக்கள் அளித்தார்கள். அப்போது ஸ்ரீ வேங்கடரமணர், தனது மாணவர்களில் ஒருவராகிய பல்லவி எல்லையா என்பவரால் வரையப்பட்டதும், பச்சை, சிவப்பு, நீலம், வெள்ளைநிறக் கற்களும், முத்துக்களும் பதிக்கப்பட்டதும் கண்ணைக் கவரும் வண்ணங்கள் நிறைந்ததுமாகிய ஸ்ரீ சீதா லட்சுமண அனுமத் ஸமேத ஸ்ரீ கோதண்ட இராமசாமியின் திருஉருவப்படமும், பட்டாடைகளும், சால்வைகளும் பரிசாக அளித்தார். படத்தைக் கண்ட சுவாமிகள் தனது வழிபடு கடவுளைப் பார்த்து மன மகிழ்ந்து பெற்றுக்கொண்டார்.

பின்னர் பூஜனை செய்து, ''நனுபாலிம்ப நடசி வச்சிதிவோ நா பிராண நாத'' என்னும் கிருதியை மோகன ராகத்தில் ''கால்நடையாகவே நடந்து என்னை ஆட்கொள்ளும் பொருட்டு இவ்வளவு தூரம் வந்தனையோ'' என்று பாடி ஆனந்தமடைந்தார். இப்படம் சுவாமிகளின் இல்லத்தில் பூசையில் வைக்கப்பட்டிருந்தது. இப்படத்தைக் களவாடுவதற்குச் சிலர் முயன்றார்களாம். முயன்றவர்கள் கனவில் பல பயங்கர நிகழ்ச்சிகள் தோன்றின. ஆகவே அவர்கள் அதனைத் தொட அஞ்சினர் எனத் தெரிகிறது.

## தெலுங்கு நௌகா சரித்திரம்

ஸ்ரீ க்ருஷண பரமாத்மாவின்பால் கொண்ட பக்தி மேலீட்டால் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் ஸ்வய கற்பனையாக நௌகா சரித்திரத்தைத் தெலுங்கு மொழியில் இயற்றி, அதனை வேங்கடரமணருக்குப் பாடம் சொன்னார். அது ஒரு நாடகம் போலச் சிறப்பாக அமைந்திருப்பதனை அறிந்த வேங்கடரமணர், அதனை வடமொழியில் சுவை நிரம்பத் திறம்பட ஓலைச்சுவடியில் எழுதிப் பாதுகாப்பாக வைத்திருந்தார். சுவாமிகளின்

நௌகா சரித்திரம் வெளியான பின்னர், அதன் பெருமை எங்கும் ஓங்கிப் பரவியது. அதனைக் கண்ட சில பொறாமைப் புலவர்கள் அப்போது தஞ்சையை ஆண்ட மன்னவரிடம் சென்று கோள் கூறினார்கள். நௌகா சரித்திரம் கிருஷ்ணனும் கோபியரும் செய்த பலவித லீலைகளைக் குறிக்கும் ஓர் நாடகமாகும். இது பாகவத புராணத்தில் இல்லாதது. காமச் சுவையினையே மிகுதியாகக் கொண்டது. இதனைப் படிக்கும் மக்கள் சிற்றின்பத்தில் ஈடுபட்டு தீய வழியில் செல்வார்கள். ஆதலால் நாட்டு மக்கள் நலனைக் கருதி அதனைத் தடை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இந்த நூலுக்கு முதல் நூல் இருந்தால் இதனை ஒப்புக்கொள்ளலாமென்றும் இடையூறு செய்தார்கள்.

பொறாமைப் புலவர்கள் கூறியவற்றைக் கேட்ட மன்னர் தன்னை நௌகா சரித்திரத்துடன் வந்து காணுமாறு சுவாமிகட்குத் திருமுகம் அனுப்பினார். சுவாமிகள் நௌகா சரிதத்தோடு சென்று மன்னரைக் கண்டார். மன்னர் சரித்திரத்தைப் படித்துப் பார்த்துப் பெரிதும் மகிழ்ந்தார். இச்சரித்திரத்திற்கு முதல்நூல் உண்டோ? என்று வினவினார். இருக்கின்றது. கொண்டு வருவதாகக் கூறித் தன் இல்லத்திற்கு வந்து செய்வது இன்னது என்று தெரியாது மிகவும் துன்புற்றிருந்தார். சுவாமிகள் துன்புற்றிருப்பதனை வேங்கடரமணர் அறிந்தார். அறியவே சுவாமிகளை வணங்கி, தாங்கள் துன்புற்றிருப்பதற்குக் காரணம் என்ன என்று கேட்டார். சுவாமிகள் நடந்த செய்திகளைக் கூறினார். அதனைக் கேட்ட வேங்கடரமணர் இதன் மூலநூல் தம் இல்லத்தில் இருக்கின்றது; அதனைக் கொண்டு வருகின்றேன் என்று கூறி அய்யம்பேட்டைக்கு விரைந்து தன் வீட்டில் தூசி படிந்து கிடந்த சுவடியை எடுத்துச் சென்று சுவாமிகளிடம் காட்டினார். அதனை ஏற்று சுவாமிகள் தன் இரு கண்களிலும் ஒத்திக்கொண்டார். பின்னர் மன்னரைக் கண்டு மூலநூல் இதுவெனக் கொடுத்தார். மன்னர் அதனைப் பெற்று மகிழ்ந்தார் பொறாமை கொண்ட புலவர்கள் வெட்கி வெளிச் சென்றனராம்.

வேங்கடரமணர் இத்தகைய பல தொண்டுகளைச் செய்து சுவாமிகளின் பேரன்புக்கு உரியவராக இருந்தார்.

## கண்ணன் அளித்த பட்டம்

ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் இல்லத்தில் நாள்தோறும் நடைபெறும் பூசனையில் முதலிலும் முடிவிலும் வேங்கடரமணர் பாடுவது வழக்கம். ஒரு நாள் அய்யம்பேட்டையிலிருந்து வேங்கடரமணர் வருவதற்கு நேரமாகியது. வேங்கடரமணர் வராமையால் சுவாமிகள் மங்களம்பாடி மங்களார்த்தி செய்ய எண்ணங்கொண்டார்.

அதுபோது ஒரு இளைஞன் உள்ளே செல்வதைக் கண்டார். கண்ணபிரானே இளைஞனாக வடிவங்கொண்டு சுவாமிகளின் பத்தினியாகிய கமலாம்பாளிடம் சென்று ''பூசனையை முடிக்க வேண்டாம். வேங்கடரமண பாகவதர் வருகின்றார். சிறிது நேரம் தாமதியுங்கள்'' என்று கூறினார். அதனைக் கேட்ட பத்தினியார் அந்த இளைஞனைச் சுவாமிகளிடம் சொல்லுமாறு அழைத்துச் சென்றார். அம்மையாரின் பின்னால் சென்ற இளைஞன் மறைந்து போயினான். சுவாமிகளிடம் அம்மையார் நிகழ்ந்த செய்தியினைக் கூறினார். ஸத்குரு வந்தவர் கண்ணபிரான் என்றறிந்தார். நீயே புண்ணியவதி என்று மனைவியார்க்கு வாழ்த்துக் கூறினார். பின்னர் ஸ்ரீ வேங்கடரமணரின் வரவினை எதிர்நோக்கிய வண்ணம் இருந்தார்.

அப்போது வேங்கடரமணர் வந்து சேர்ந்தார். அவரை சுவாமிகள் வேங்கடரமண பாகவதரே! வருக என்று அன்போடு அழைத்தார். அவர் ஒன்றும் புரியாது மலைத்து, பீதியுற்று நின்றார். காலந்தாழ்ந்து வந்தமைக்கு வருந்தினார். மன்னித்தருளுமாறும் வேண்டிக்கொண்டார். அப்போது சுவாமிகள் வேங்கடரமணரை நோக்கி, பாகவதர் என்ற பட்டம் உமக்கு நான் கொடுத்த பட்டம் அன்று, நீர் வழிபடும் கண்ணபிரானால் அளிக்கப்பட்ட பட்டம் என்று நடந்த நிகழ்ச்சியை எடுத்துக் கூறினார். பின்னர் மங்களம் பாடி பூஜையை முடித்தார். அதுமுதல் இவரை குருஸ்வாமிகள் ஸ்ரீ வேங்கடரமண பாகவதர் என்றே அழைப்பாராயினார். அவ்வாறே நாமும் பாகவதர் என்று அழைக்கிறோம்.

ஒருநாள் சுவாமிகள் ஸ்ரீ வேங்கடரமண பாகவதரை நோக்கி, நீர் சுயமாகவே ஸாகித்தியங்களை இயற்ற வேண்டாமென்று ஆணையிட்டார். பல நாட்கள் சென்றன. ஒருநாள் நள்ளிரவில் சுவாமிகள் பாகவதர் கனவில் தோன்றி, ''நிவு மாதவுடு பரமுகா கொன்னிக்ருதுலு சேய ஒத்சுனு'' என்று அனுக்கிரகஞ் செய்தார். அது முதல் பாகவதர் அனேக கிருதிகளை இயற்றி குருநாதர் முத்திரையிட்டுக் காணிக்கையாக ஸமர்ப்பித்தார்.

## திருமண வீதியுலா

பாகவதரின் அருமைத் தந்தையார் தமது குமாரனுக்கு 41-ம் வயதில் திருமணம் முடிக்க எண்ணங்கொண்டார். கொள்ளவே அய்யம்பேட்டையில் வாழ்ந்து வந்த சிறந்த பாகவதர் ஒருவரின் மகளாகிய முத்துலெட்சுமியைத் தேர்ந்தெடுத்தார். ஆனால் ஹடயோகத்தில் பெரிதும் விருப்பங் கொண்டிருந்த பாகவதருக்குத் திருமணஞ் செய்துகொள்ள விருப்பம் இல்லை. பெற்றோர்கள் சுவாமிகளிடம் சென்று தெரிவித்தார்கள். சுவாமிகள் பாகவதரை அன்புடன் அழைத்து நீர் திருமணஞ் செய்துகொள்ள மறுப்பதன் காரணம் என்ன என்று வினவியதற்கு, தங்கள்பால் கொண்டுள்ள பக்தி சிரத்தை குன்றிவிடுமோ என்பதேயாம் என்றார். பின்பு ஸ்வாமிகள் உத்திரவிட, பாகவதர் திருமணஞ் செய்துகொள்ள உடன்பட்டார்.

பின்னர் சுவாமிகள் தன் கையாலேயே திருமண அழைப்பிதழ் எழுதினார். ஸ்ரீ வேங்கடரமண பாகவதருக்கும் திருமதி முத்துலெட்சுமி அம்மையாருக்கும் திருமணம் சிறப்பாக அய்யம்பேட்டையில் நடைபெற்றது.

திருமணம் முடிந்ததும், மணமக்கள் நன்ருக அலங்காரஞ் செய்துகொண்டு இரட்டைக் குதிரைகள் பூட்டப் பெற்ற சாரட்டு வண்டியில் நகர்வலம் வந்தார்கள்' ஸத்குரு சுவாமிகள் பல்லக்கில் ஊர்வலத்தின் முன்னே சென்ருர்கள். மாணவர்கள் திவ்ய நாமம் பாடிக் கொண்டு, பின்னே சென்ருர்கள். அதனைக் கண்டு யாவரும் பெரிதும் மகிழ்ந்தார்கள். பின்னர் சுவாமிகள் மணமக்களை வாழ்த்தித் திருவையாறு சென்ருர்கள்.

திருமணத்திற்குப் பின்னர் ஸ்ரீ பாகவத ஸ்வாமிகள் அய்யம்பேட்டை ராமச்சந்திரபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ கோதண்டராமஸ்வாமியை ஸ்தோத்திரம் செய்து பஞ்சரத்ன ஸ்லோகங்களும் ஸ்ரீ பிரஸன்ன ராஜ கோபாலஸ்வாமியை ஸ்தோத்திரம் செய்து ''அஸ்வ மாலிகா'' ஸ்தோத்திரங்களும் கீர்த்தனைகளும் பாடி யிருக்கிருர்கள்.

இவர் நாம நாராயணி, ஜோதி சொரூபினி, நடன வேளாவளி, விஜயநாகரி, நாத விநோதினி போன்ற பல அருமையான இராகங்களிலும் கிருதிகளை இயற்றி யுள்ளார். இவர் 2500 கிருதிகள் கண்ணபிரான்மீது இயற்றியுள்ளாரென்று சொல்லப்படுகிறது.

அவைகளில் 150 ஸாகித்தியங்கள் இதுவரை கிடைத்திருக்கின்றன. மற்றவை தமிழ் நாட்டிலுள்ள பல நகரங்களில் வசிக்கும் ஸௌராஷ்டிரர்களும் மற்ருே ரும் வாய்மொழியாகப் பாடி வருவதாகத் தெரிகிறது.

வேங்கடரமண பாகவதர் அவர்கள் தம் குருநாத ரைப் போற்றி, தியாகராஜ மங்களாஷ்டகம் இயற்றி யுள்ளார். இவருடைய பாடல்கள் சொற்சுவை பொருட்சுவை நிரம்பியவை. கவிநயம் மிகுந்தவை. பக்திச்சுவை பெருக்கெடுத்து ஓடத்தக்கவை. படிப் பவர் உள்ளத்தை உருக்குந் தன்மை வாய்ந்தவை. கேட்டவர் செவிகளில் இன்பத்தேன் பெருக்கெடுத்துப் பாயத்தக்கவை. இவருடைய பாடல்கள் இறைவனிடம் அளவுகடந்த அன்பினை உண்டாக்கும். அடக்கத்தையும் அருளையும் உண்டாக்கும். இத்துணை சிறப்புகட்கெல் லாம் காரணம் பாகவதர் அருட்கவியாய் விளங்குவதே யாகும்.

சுவாமிகள் சிறந்த இராம பக்தர், பாகவதர் சிறந்த கிருஷ்ண பக்தர். இவர்கள் இருவரும் இவ்விரண்டு அவதாரங்களையும் போற்றிப் புகழ்ந்து, வழிபட்டு, வணங்கி அவர்களின் திருவருளைப் பெரிதும் பெற்றுள் ளார்கள். இவர்கள் இருவரையும் அவ்விருவர்களின் அவதாரங்களே என்று கூறுவது சிறிதும் மிகையாகாது.

## பாகவதர் அவர்களின் சிஷ்யர் ஸ்ரீ வேங்கட சூரி ஸ்வாமிகள்

அய்யம்பேட்டையில் பாகவதர் அவர்கள் வாழ்ந்து வரும்போது கவிச்சக்கரவர்த்தி ஸ்ரீவேங்கடசூரி ஸ்வாமி கள் அங்கு வாழ்ந்து வந்தார். இவர் பன்மொழிப் புலவர். மாட்சிமை தங்கிய தஞ்சை சிவாஜி மன்னரின் ஆஸ்தான ஸ்மஸ்கிருத பண்டிதர். அரச சபையில் புலவர்களை தனது வாக்குத் திறமையால் வென்று மன்னரால் 'சூரி' என்ற பட்டமும் வீர கண்டாமணியும் பரிசாகப் பெற்றவர். இவரை தட்சிண காளிதாஸ் என்றும் கூறுவர்.

அய்யம்பேட்டை ஸ்ரீ பிரசன்ன ராஜகோபால ஸ்வாமி சன்னதியில் கோவில் கொண்டுள்ள ஸ்ரீ லட்சுமி நரசிம்ம மூர்த்தியின் பிரத்யக்ஷ தரிசனம் பெற்றவர். ஓர் துவாதசியில் அலங்கார போஜன அமுது செய்யும் படி ''ஜேம் — ஜேம் கா²ம்புமு ஜே தேவு'' எனப் பாடி ஆராதித்து ஸ்ரீ நரசிம்ம பெருமான் அமுதுண்டார் என் பது போன்ற மனதை கொள்ளை கொள்ளும் பல நிகழ்ச்சிகளையுடையது இம்மகானது சரிதம்.

## மதுரை மஹா ஜனங்களின் வரவேற்பு

மதுரை ஸௌராஷ்டிர விப்ர மஹாஜனங்களின் வேண்டுகோளின்படி ஸ்ரீமத் பாகவத ஸ்வாமிகள் மதுரைக்கு வருகை தந்தபோது ஸ்ரீமத் கவி வேங்கட ஸூரி ஸ்வாமிகள் தமது குருநாதரான பாகவத ஸ்வாமி களுக்கு ஷோடச உபசாரத்துடன் சிபிகாரோஹம் செய்து மகத்தான ஊர்வலம் செய்தார்கள். மஹா ஜனங்கள் பாகவத ஸ்வாமிகளை பூஜித்து ஆராதித்தார் கள். ஊர்வலத்தில் வேங்கடஸூரி ஸ்வாமிகள் அர்ச்சக ராகி கற்பூர ஆரதி செய்து வந்தார்.

## வாலாஜா நகர் வாசம்

மைசூர் அரச பரம்பரையைச் சேர்ந்த கார்வேடி நகர் அரசர் ஸ்ரீ வேங்கடரமணரின் இசைப் புலமை யினைக் கேள்விப்பட்டு அவர்பால் சங்கீதம் பயில விருப் பங்கொண்டார். பாகவதர் அவர்கள் அதற்கு உடன் பட்டு அடிக்கடி கார்வேடி நகர் சென்று வந்தார். அடிக்கடி சென்று வருதல் பாகவதருக்கு மிகவும் சிரம மாக இருந்தது. ஆதலால் அச்சிரமத்தைப் போக்கும் பொருட்டு வாலாஜாபேட்டையிலேயே ஸ்திர வாசம் செய்ய எண்ணினுர். அவ்வெண்ணத்தினை அறிந்த வேங்கடசூரி ஸ்வாமிகள் மிகவும் கவலை கொண்டார். தங்கள் பிரிவு என்னைப் பெரிதும் வருத்தும் என்று பாக வதர் அவர்களிடம் கூறினுர். பாகவதர் அவர்கள் அவரைத் தேற்றித் தான் வழிபட்டுவந்த நரசிம்ம மூர்த்தியை அவருக்கு அன்பளிப்பாக வழங்கினுர். வேங்கட சூரி ஸ்வாமிகள் நரசிம்ம மூர்த்தியின் கிருபா கடாட்சத்தை பெரிதும் பெற்றவர். அதனை அறிந்தே பாகவதர் அவருக்கு அவ்விக்ரஹத்தை வழங்கினுர். அப்போது வேங்கட சூரி அவர்கள் பாகவதர் மீது, ''ஸ்ரீ நரஹரி தரிசனகரேசி'' என்று வழங்கும் பாடலைப் பாடினுர்.

ஸ்ரீ பாகவதஸ்வாமிகள் தங்களது 53-ம் வயதில் அய்யம்பேட்டையிலிருந்து வாலாஜாபேட்டைக்கு விஜயமானுர்கள். இதன்பின் இம்மகான் வாலாஜா பேட்டை வேங்கடரமணர் என்று அழைக்கப்படலானுர். ஸ்ரீ வேங்கடரமண பாகவதர் அவர்கள் வாலாஜாபேட் டைக்கு வருவதனை அறிந்த பல்லி நாராயணசாமி செட்டியார் அவர்கள், தாசில்தார் லெக்ஷ்மண நாயுடு,

கம்பிளி முனிசாமி செட்டியார் அவர்கள் அங்குள்ள பெருமக்களின் உதவியால் இராயிஜி வீதியில் 21-ம் நம்பர் வீட்டினை விலைக்கு வாங்கி பாகவதர் அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கினார்கள். அவ்வீட்டில் ஒரு பகுதி பஜனை மந்திரம் தர்மசாசன ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ளது. பாகவதர் அவர்கள், தியாகராஜ சுவாமிகளால் அளிக்கப்பட்ட ஸ்ரீ சீதா லெட்சுமண ஹனுமத் ஸமேத கோதண்டராமமூர்த்தி விக்ரகங்கள், தனது பரம்பரையினர் வழிபட்டு வந்த ருக்மணி, சத்தியபாமா சமேத கிருஷ்ணபிரானின் விக்ரகத்தையும், சுவாமிகளின் திருவுருவப் படத்தையும் பஜனை மடத்தில் எழுந்தருளச் செய்து நாள்தோறும் இரண்டு வேளைகளில் பூசனையும், இரவில் பஜனையும் நடத்தி வந்தார். அப்போது சுவாமிகள், பாகவதர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, வாலாஜாபேட்டைக்கு எழுந்தருளிப் பத்து நாட்கள் தங்கி பஜனை முதலிய நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்தி வந்தார். அதனால் அவ்வீடும் பஜனை மடமும் சீரும் சிறப்பும் அடைந்தன. இப்போது அவ்வீதி ஸ்ரீ வேங்கடரமண பாகவதர் வீதி என அழைக்கப்படுகின்றது.

பாகவதர் அவர்களுக்கு இரண்டு ஆண் மகவும் ஒரு பெண் மகவும் பிறந்தார்கள். மூத்த புதல்வருக்குக் கிருஷ்ணசுவாமி என்றும், இளைய புதல்வருக்கு இராமசுவாமி என்றும், பெண் மகவுக்குத் துளசியம்மாள் என்றும் பெயரிட்டனர். இது தன் குருநாதர் வழிபட்டு வரும் இராமபிரானையும் தான் வழிபட்டு வரும் கண்ணபிரானையும் குறிப்பிடுவதற்கு வைக்கப்பெற்ற பெயர்களாகும். மக்கள் இருவரும் தங்கள் அருமைத் தந்தையின் புகழினை நிலைநாட்ட அரும் பெருந் தொண்டு செய்து வந்தார்கள்.

## தீர்த்த யாத்திரை

ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் தனது மாணவர்கள் பலருடன் தீர்த்த யாத்திரை செய்யப் புறப்பட்டார். சென்னை, திருப்பதி முதலிய நகரங்களுக்குச் சென்று காஞ்சிபுரத்திற்குப் புறப்பட்டார்கள். புத்தூர் வழியே வரும்போது வழியில் உள்ள கிணற்றருகே பலர் நின்று துயருற்றிருப்பதைக் கண்டார். காணவே பல்லக்கிலிருந்து இறங்கி வந்து நீங்களனைவரும் துயரங்கொண்டிருக்கக் காரணம் என்னவென்று கேட்டார். அவர்கள் சேஷய்யர் என்னும் அந்தணர் கிணற்றில் விழுந்து இறந்த செய்தியைக் கூறினார்கள். அதனைக் கேட்டதும் சுவாமிகள் தனது மாணவர்களாகிய தஞ்சை இராமராவ், (தில்லை ஸ்தானம்) இராமய்யங்கார் முதலியவர்களைக் கிருதிகள் பாடும்படியாகக் கட்டளையிட்டார்கள். பின்னர் வேங்கடரமண பாகவதர் அவர்களை, '' நா ஜீவா தார நாநோ முபலமா '' என்னும் கிருதியைப் பாடச் சொல்லி துளசி தீர்த்தத்தைத் தெளிக்குமாறு கட்டளையிட்டார். உடனே இறந்தவர் உயிர்பெற்று எழுந்தார். அங்கிருந்துதான் சுவாமிகள் வாலாஜாபேட்டை வந்து தங்கினார்கள். வாலாஜாபேட்டையிலுள்ள தனது பிரதம சிஷ்யர் வேங்கடரமண பஜனை மடத்தில் பத்து நாட்கள் தங்கினார்கள். பின்னர் திருவையாறுக்குப் புறப்படும்போது, அவர்களுடன் தனது மூத்த குமாரன் கிருஷ்ணசாமியை சுவாமிகளின் விருப்பப்படி சங்கீதம் பயில வேங்கடரமணர் அனுப்பி வைத்தார். அது முதல் கிருஷ்ணசாமி தியாகய்யரின் சிஷ்யர்களில் ஒருவரானார்.

## தியாகராஜ சுவாமிகள் மோட்சம்

பராபவ ஆண்டு புஷ்ய சுத்த ஏகாதசி இரவில் பஜனை நடந்துகொண்டிருந்தபோது சஹானா ராகத்தில் '' கிரியை நெலகொன்ன ராமுனி '' என்னும் கிருதியைப் பாடினார். பின்னர் சபையில் உள்ளவர்களைப் பார்த்து சமீப பகுள பஞ்சமி தினத்தில் அதிசயம் நடக்கப்போகின்றது; நீங்கள் யாவரும் வரவேண்டுமென்று கூறினார்.

## அரிய பொக்கிஷம்

தான் முத்தி அடையப் போவதனை முன்னமே உணர்ந்த ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் தனது ஜீவ சமாதிக்கு இரு மாதங்கட்கு முன் தனது பிரதான பிரதம மாணவராகிய வேங்கடரமண பாகவதரை அழைத்து விலை மதிப்பற்ற சங்கீத சாஸ்திர ஓலைச் சுவடிகளைக் கொடுத்து அவைகளைப் பாதுகாத்து வைக்கும்படி கட்டளையிட்டார். சுவாமிகள் இயற்றியவை 24000 கிருதிகள் என்று கூறப்படுகின்றன. ஆனால் அவரது முதன் மாணவராகிய பாகவதர் அவர்கள் '' சத ஸஹஸ்ர கீர்த்தந கிருதி தீரம் '' என்று குறிப்பிடுவதால் சுவாமிகள் பாடியவை ஒரு லட்சம் என்று தெரிகிறது.

## பாகவத சீடர்கள்

மைசூர் சமஸ்தான வித்துவான் சதாசிவ ராவ், சாத்தூர் பிடில் குப்புசாமி அய்யர், சித்தூர் கஞ்சிரா இராதாகிருஷ்ண அய்யர், கடம் லோகா நாராயண அய்யர், மதுரை கெட்டி - நன்னுசாமி பாகவதர், மகாகவி வேங்கட சூரி சுவாமிகள், மதுரை நீலமேகம் வெங்கடாசல பாகவதர், ஸ்ரீனிவாச பாகவதர், பெங்களூர் பிடில் முனிஸாமப்பா, திருவொற்றியூர் ராமஸ்வாமி அய்யர் முதலியவர்கள்.

## பாகவதர் கனவில் குருநாதர்

பாகவதர் கனவில் சுவாமிகள் தோன்றி தான் முத்தியடைந்த பஞ்சமி திதியை அனைவரும் கொண்டாட வேண்டும் என்றார். எனது ஆத்மா திருவரங்கம், திருவேங்கிடம், காசி, ஜகந்நாதம், பத்ராசலம், காஞ்சீபுரம், சிதம்பரம், முதலிய திவ்ய தலங்களில் யாத்திரை செய்து முடித்த பின்னரே ஏகாதசியன்று பூரண சித்தியை அடையப்போகின்றது. ஆதலின் ஏகாதசியை குரு பூசை நாளாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று எச்சரிக்கை செய்தார். அதுபோலவே இன்றும் வாலாஜாபேட்டை வேங்கடரமணர் பஜனை மடத்தில் குருபூஜை நடந்து வருகிறது.

இராமபிரானின் திருவருளைப் பெற்ற தியாகராஜ சுவாமிகள் நாலைந்து நாட்களுக்கு முன்னரே ஆபத்

சந்நியாச தீட்சையினைப் பெற்றார். கடைசி நாள் தை மாத கிருட்டின பட்ச பஞ்சமி திதியன்று, தனது மாணவர்களும் பொதுமக்களும் தன்னைச் சூழ்ந்திருக்க சுவாமிகள் இராமபிரானை ஆனந்தமாகப் பாடி நிஷ்டையில் ஆழ்ந்திருக்கும்போது அனைவரும் கண்டு அதிசயிக்குமாறு சுவாமிகளின் கபாலம் திறந்து அவருடைய ஆன்மா அளவற்ற சுடர் வீசியவாறு வெளிப்பட்டு, ஆகாயத்தினிடத்தே சென்று மறைந்தது. அப்போது அருகில் பாகவதரின் குமாரராகிய கிருஷ்ணஸ்வாமி பாகவதரும் இருந்தார்.

## இறைவன் திருவடி சேர்தல்

வாலாஜாபேட்டையில் சிறப்புற பஜனை நடத்தி வந்த நமது வேங்கடரமண பாகவதர் அவர்கள் தன் வாழ்நாள் முழுவதும் பஜனை பாடியும், இறைவனுக்குப் பூசனை புரிந்தும், தன் குருநாதரின் புகழை உலகம் எங்கும் கர்நாடக சங்கீத மூலம் பரப்பியும் வந்து இறுதியில் 1874-ம் ஆண்டு கிருஷ்ணு கிருஷ்ணு என்று கூறிக்கொண்டே இறைவன் திருவடிகளை அடைந்தார்.

சுபம்.

---

## மதுரை செளராஷ்டிர சபையாரிடம் இருக்கும் பொக்கிஷம்

உலகம் எங்கும் தனது சாகித்தியங்களைப் பரப்புவதன் மூலம் நாட்டில் கடவுள் பக்தியினை வளர்த்து வந்த சுவாமிகளின் அன்புக்கும், நம்பிக்கைக்கும் உரிய முதன்மையான மாணவராகத் திகழ்ந்த ஸ்ரீ வேங்கடரமண பாகவதரிடம் அவர் பாடிய கீர்த்தனங்கள், அவரால் எழுதப்பெற்ற ஓலைச் சுவடிகள், அவரது திருப்பாதுகைகள், இசைக் கருவிகள், பூசனைக்குரிய பாத்திரங்கள், வழிபட்டுவந்த ஸ்ரீ கோதண்டராம விக்ரகம், போதண்ண பாகவதம், சுரார்ணவம், தாளார்ணவம் முதலிய நூல்களும் அளிக்கப்பட்டன. சுவாமிகளும் பாகவதரும் சேர்ந்து எழுதிவைத்த கையெழுத்துப் பிரதியாகும்.

சுந்தரத் தெலுங்கு மொழியில் எழுதப்பெற்ற இப் புத்தகம் அச்சுப் பிரதியோ என்று ஐயுற வேண்டிய நிலையில் அழகாக எழுதப்பட்டதாகும். அஃது மதுரை ஸௌராஷ்டிர ஸபை மியூஸியத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

வாலாஜாபேட்டை பாகவதர் பஜனை மடத்தில் இருந்த வேங்கடரமணரின் பாதுகைகள், அவரது சாகித்யங்கள், புதிய வர்ணங்கள், ஸ்வர ஜதிகள் அடங்கிய ஏராளமான ஏட்டுச் சுவடிகள், பூசனைக்குரிய பாத்திரங்கள் முதலியனவும் 1943-ஆம் ஆண்டு ஜனவரி 18-ம் நாள் மதுரை செளராஷ்டிர சபையினரின் விடாமுயற்சியால் அதுபோது செயலாளராக இருந்த ஸ்ரீ P. S. A. கிருஷ்ணய்யர் அவர்களால் மதுரைக்குக் கொண்டுவந்து செளராஷ்டிர சபா பொருட்காட்சியில் தக்க பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன. இதற்கு ஸ்ரீ தியாகராஜ வேங்கடரமண மந்திரம் எனப் பெயர். பெரியவர்களின் திருநட்சத்திரங்களில் அங்கு பஜனை நடைபெற்று வருகின்றது. இவைகளை நன்கு பாதுகாத்துவரும் மதுரை செளராஷ்டிர சபையார் பெரிதும் புண்ணியஞ் செய்தவர்கள் ஆவார்கள். அருமையான சங்கீதப் பொக்கிஷத்தைப் பாதுகாத்து வரும் செளராஷ்டிர சமூகத்தினரை இந்நாடு என்றும் மறவாது பாராட்டும் என்ற நம்பிக்கை பெரிதும் எங்களுக்கு உண்டு. இயற்கையாகவே கடவுள் பக்தியில் மிகவும் சிறந்த சமூகம் செளராஷ்டிர சமூகம் என்பதனை இங்கு இப்போது நினைவுபடுத்துகின்றோம்.

வாழ்க தியாகராஜ சுவாமிகள்!
வாழ்க வேங்கடரமண பாகவத சுவாமிகள்!
வாழ்க வேங்கட சூரி சுவாமிகள்!
வாழ்க இசைக் கலை!

---